செய்தி வெளியீடு எண். 501 நாள்.– 9.8.2007

# அரசு செய்தி வெளியீடு

தமிழக அரசே கேபிள் டி.வி. இணைப்பை நடத்துவது குறித்து இன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் விரிவாக விவாதிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் மின்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி, தலைமைச் செயலாளர், நிதித் துறை செயலாளர், உள்துறை செயலாளர், எரிசக்தித் துறை செயலாளர், தகவல் தொழில் நுட்பத் துறை செயலாளர், மின்வாரியத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விரிவாக நடைபெற்ற விவாதத்திற்குப் பிறகு விரைவில் தமிழக அரசின் சார்பில் அரசு பொதுத் துறை நிறுவனம் மூலமாக கேபிள் டி.வி. இணைப்பு வழங்குவதை மேற்கொள்ளலாம் என்றும், இதற்காக உரிய உரிமம் கோரி மத்திய அரசுக்கு உடனடியாக விண்ணப்பிக்கலாம் என்றும், தொடர்ந்து இந்தப் பணிகளை மேற்கொள்வது குறித்து 11ஆம் தேதி நடைபெறும் அமைச் சரவையில் விவாதித்து முடிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை,சென்னை–9